டில்கா
வரச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 8174

விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 11 ஷவ்வா 26 இதழ் 194
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-8-1981

நல்லூர்க் கந்தசுவாமி
கோவில் உற்சவத்தில்
மலிவு விற்பனை
FIBRE GLASS நுண்ணிழைக் கண்ணுடியில் செய்யப்பட்ட நாகரிகமான வீட்டுத்தளவாடங்கள், பூச்சாடிகள், சமயலறை- குளியலறை உபகரணங்களுக்கு—
நல்லூர் காட்சிச்சாலை
ஆதீனத்துக்குமுன்
நல்லூர்
FIBERITE MOULDINGS
தம்பசிட்டி, பருத்தித்துறை.
Phone: 590. [0689]

# ஜனாதிபதி - கூட்டணி இன்று

# மீண்டும் சந்திப்பு!

## முக்கியமான விடயங்களில் உடன்பாடு ஏற்படுமா?

(நமது அரசியல் நிருபர்)

**ஜனாதிபதிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குமிடையிலான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பமாகிறது. இன்று நடைபெறும் பேச்சுவார்த்தைகளுடன் இருசாராருக்குமிடையே சில முக்கியமான விஷயங்களில் ஓரளவு உடன்பாடுகள் ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.**

இம்மாதம் 18ம் திகதி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்குமிடையே சில முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடந்தது தெரிந்ததே.

இச்சந்திப்புக்காக பேராசிரியர் ஏ ஜே. வில்சன் கனடாவிலிருந்து ஜனாதிபதியால் அவசரமாக அழைக்கப்பட்டிருந்தார்.

இதனுடன் முக்கிய சில அமைச்சர்களான திருவாளர்கள் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், லலித் அத்துலத் முதலி, நிஸங்க விஜயரத்தின, எஸ் தொண்டமான், எம். எச் முகம்மது, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

திரு. அமிர்தலிங்கத்துடன் திரு. இரா சம்பந்தன். கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும் சென்றிருந்தனர்

இச்சந்திப்பின் விபரம் பற்றி எவரும் கருத்து வெளியிட மறுத்தபோதிலும் இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற விஷயங்கள் குறித்து அரசியல் வட்டாரங்களில் பலவிதமாகப் பேசப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கருத்தெதுவும் தெரிவிக்க மறுத்ததையும், சம்பவம் நிகழ்ந்த சூழ்நிலையையும் ஆதாரமாகக் காட்டி இருசாராருக்குமிடையிலான இப்பேச்சுவார்த்தை சிறுபான்மையினர் தொடர்பான முக்கிய அரசியல் பிரச்னைகளுக்கான நியாயமான அல்லது குறைந்த பட்ச தீர்வு குறித்ததாகவே இருக்கலாமென அரசியல் வட்டா

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மருத்துவ பீடத்துக்கு மின் விநியோக வசதி; ரூபா 2 லட்சம் ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு மின்வசதிகளுக்கான 'டிரான்ஸ் போமர்' அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்திலேயே மேற்படி நிதி ஒதுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோர் கலந்து கொண்டனர் [மா]

## பத்திரிகைத் தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## கண்ணதாசன் நிலை கவலை

நியுயோர்க், ஆக. 26

கவிஞர் கண்ணதாசன உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருக்கிறது என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கவிஞர், இங்குள்ள தனியார் வைத்தியமனையில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

இவருக்கான சகல மருத்துவச் செலவுகளையும் தமிழக அரசு பொறுப்பேற்றுள்ளது.

## செப். 8-ல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சிறிமாவுக்கு உத்தரவு

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எதிராக ஏன் இடைக்காலத்தடையுத்தரவு விதிக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்டு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிமாவுக்கு நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.

செப்டம்பர் மாதம் 8-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி இதற்கான காரணத்தைத் தெரிவிக்குமாறு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி பணித்துள்ளார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தம்மை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியிருந்தமைக்கு எதிராகத் தடையுத்தரவு வழங்கப்படவேண்டுமென்று திரு. மைத்திரிபாலசேனநாயக்கா சமர்ப்பித்த மனு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட்டபோதே இந்த நோட்டீஸை திருமதி பண்டாரநாயக்காவுக்கு நீதிபதி பிறப்பித்தார்.

சுதந்திரக்கட்சியிலிருந்து தாங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து

[6-ம் பக்கம் பார்க்க]

## அபிவிருத்தி சபைத் திட்டங்கள்: நிபுணர் குழு ஆராயும்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையினல் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள்பற்றி ஆராய்வதற்கென உள்ளூராட்சி அமைச்சைச் சேர்ந்த நிபுணர் குழுவொன்று யாழ்ப்பா

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழக சட்டமேலவை தீர்மானம்

சென்னை, ஆக. 26

இலங்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து தமிழ்நாடு சட்ட மேலவை பெரும் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளது

இதுசம்பந்தமாக அமைச்சர் ராஜா முஹம்மது முன்மொழிந்த ஒரு தீர்மானம், சட்ட மேலவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உங்கள் முதலீட்டிற்கு 27% வரை வட்டி வழங்குகின்றோம்
அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனும்
★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் [பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்]
நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.
★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை
வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்
TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, 249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
போன் : 7680

# இளம்பெண்ணைக் கடத்திய இளைஞர் கோஷ்டி!

## இராணுவத்தினரின் உதவியால் கைது செய்யப்பட்டனர்

(புலோலி)

வீட்டில் துணையிருந்த வயோதிபரைத் தாக்கிவிட்டு இரவு வேளையில் வாலிபர்கள் சிலரால் கடத்திச்செல்லப் பட்ட இளம்பெண் ஒருவர் இராணுவத்தினரால் தக்க சமயத்தில் மீட்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக மூன்று இளைஞர்களைக் கைது செய்த பொலிஸார், மேலும் மூன்று இளைஞர்களைத் தேடி வலை வீசியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 16 வயது இளம் பெண் வீட்டுக்குகினிக்குள் வேளையிலிருந்தாரென்றும், அவ்வேளையில் இவரது பெற்றோர் கலியாண வீடொன்றுக்குச் சென்றிருந்ததால் பெண்ணுக்குப் பாதுகாப்பாக வயோதிபரொருவர் இருந்தாரென்றும், வீட்டிற்குள் திடீரெனப் புகுந்த வாலிபர்கள் சிலர், அங்கிருந்த வயோதிபரைத் தாக்கிவிட்டு குகினிக்குள்ளிலிருந்த இப்பெண்ணைத் தூக்கிக் கொண்டு வான் ஒன்றில் சென்றுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

வாலிபர்கள் பிரஸ்தாப இளம் பெண்ணை மயிலிட்டியிலுள்ள ஆளரவமற்ற வீடு ஒன்றிற்குக் கொண்டுசென்ற போது அப்பெண் உதவி கோரிச் சத்தமிட அயலவர்கள் திரண்டனர். அப்போது அவ்வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதென்றும் இதை அறிந்து அவ்வாலிபர்கள் இளம் பெண்ணையும் வானையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் இளம் பெண்ணை மீட்டதுடன் அங்கிருந்த வானையும் கைப்பற்றி காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தகவல் கிடைத்த வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. உடுகம்பொல தலைமையிலான பொலிஸ் கோஷ்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வேலும்மயிலும் துரைக்குட்டி, பாலசுப்பிரமணியம், ரவிசங்கர், நவரத்தினம் ஸ்ரீ ஆகிய மூவரையும் கைது செய்ததுடன், வான் சாரதி உட்பட இன்னும் மூன்று இளைஞர்களைத் தேடி வலைவீசியுள்ளது. கடத்திச் செல்லப்பட்ட பெண் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

## 'கிராமத்தின் பாதுகாப்புக்கு நட்புறவுச்சங்கம் உதவ வேண்டும்'

(ஊரெழு)

"கிராமத்தின் பாதுகாப்பும் சமாதான சகவாழ்வும் அங்கு வாழும் மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. பாதுகாப்பில் கிராமங்கள் தன்னிறைவு அடைவதைப் பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சங்கம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். இந்த வகையில் ஊரெழு பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சங்கம் சிறப்பாக இயங்கிவருவதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தக் கிராமத்தில் ஏற்படும் சிறிய தகராறுகள் இந்தச் சங்கத்திடம் விடப்பட்டுத் தீர்வுகாணப்படுகின்றன. இரவு நேரங்களில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் இல்லாத காலங்களில் தீயசக்திகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க இச்சங்கம் நியமித்துள்ள பாதுகாப்புத் தொண்டர் படையின் சேவை விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது."

ஊரெழு பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுச் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. சுகுணேந்திரன் மேற்கண்டவாறு கூறினார். திரு. க. லோகேஸ்வரன் தலைமையில் ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடை

(5-ம் பக்கம் பார்க்க)

## முருங்கன் ஜீவோதயம்

(மன்னார்)

முருங்கன் ஜீவோதயம் பண்ணையை மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பீ. எம். செபமாலை ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

முருங்கன் ஜீவோதயப் பொறுப்பதிகாரி வண. ஜெயராசசிங்கத்துடன் கலந்துரையாடியபின், மாணவர் விடுதி, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, மீன்வளர்ப்புத்திட்டம், தாரா, கோழி வளர்ப்பு போன்றவற்றைப் பார்வையிட்டனர். (அ)


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

4 டெறி இலக்கத் தகடு கொண்ட "வைக்கோல் விக்டர்" கார் உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: இல 19, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0742

இங்கிலீஸ் கிக்கிகயல் வோட்டம் விற்பனைக்குண்டு. நாச்சி 12. தொடர்புகொள்ள: 84, புறாடி வேலி, அரியாலை, யாழ்ப்பாணம். 0732

1090 Minor 2 Sri 4159 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: விஜயநாயகம், மயிலங்காடு, ஏழாலை. அல்லது சபாநாயகம், 83, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 0738

பிறவுண் றோட்டில் ஒன்றேகால் பரப்பு வட்டுறுப்பான காணி விற்பனைக்கு உண்டு. 37/1 சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். 0723

## தேவை

தேவைக்ள் தயாரிப்புகளைச் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவாஸ் மெறண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0741

ரிப்பர் லொறிகள் தேவை. காங்கேசன்துறையில் தினசரி 12 மணித்தியால வேலைக்கு. மூன்று மாத வேலைக்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது. வாகனங்களுடன் ஆகஸ்ட் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் தொடர்பு கொள்ளவும். 37, நக்காவேலி, கன்டிக்குளி, யாழ்ப்பாணம். 0744

காங்கேசன்துறையில் ரிப்பர் லொறிகளைச் செலுத்துவதற்கு அனுபவம் உள்ள லொறிடிரைவர்கள் தேவை. வதிசம்பளத்துடன் கிரமமானஓவர்டைமும் உண்டு. 1981 ஆகஸ்ட் 29ஆம் 30ஆம் திகதிகளில் நேரில் வரவும். 37, நக்காவேலி, கன்டிக்குளி, யாழ்ப்பாணம். 0743

பேசாலையில் கிளை நடத்த உதவியாளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். முகவரி: பீட்டர் துரம், செல்மொனிக்கா ஸ்டோர்ஸ், பிரதான வீதி, பேசாலை. 0745

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

ஒருமித்த இருநூறு வெற்றுச் சாக்குகள் விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. கேள்விகள் சங்கத்தில் வைப்புப் பணம் ரூபா 300/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்திப்பெற்றபடிவத்தில் 5-9-81ம் திகதி பி. ப. 1-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் மெழுகிட்ட உறையில் "சாக்கு கேள்வி" என எழுதிப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது சங்கத்தில் உள்ள கேள்விப்பத்திரப்பெட்டியில் விண்ணப்பதாரரே நேரில் இடப்படவேண்டும். கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சங்கத்தின் இயக்குனர்சபைக்கு உரிமையுண்டு.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

24-8-81 (0737)

சுன்னாகம் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## கேள்விப் பத்திரமூலம் லொறி விற்பனை

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தின் 24 ஸ்ரீ 2252 இலக்க இசுசு லொறி கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படும் கொள்வனவு செய்ய விரும்புவோர் "பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம்." என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 10-9-81 பி. ப. 4-00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக கேள்விப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறி கேள்விப் பத்திரம்" என்று தவறாது குறிப்பிடப்படல் வேண்டும்.

மீளளிக்கப்படாத ரூபா 25/-ம் மீளளிக்கப்படும் வைப்புப் பணம் ரூபா 500/-ம் சங்க அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப்பெற்றுக் கொள்ளலாம்.

லொறியை 7-9-81 லிருந்து 10-9-81 வரை சங்க வேலை நாட்களில் சங்க கராச்சில் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
25-8-81 (0739)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தொண்டமனாறு என்னுமிடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிவசம்பு என்பவரின் மரணசாதன மெழுதப்பட்ட சொத்துக்களின் விடயத்தில்......

மரணமெய்தியவர்
ஆறுமுகம் சிவசம்பு கிவேகானந்தன், தொண்டமனாறு.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்:
வழக்கு இல: ரி/90

எதிராக

1. ஆறுமுகம் சிவசம்பு கைம்பெண் தங்கமணி,
2. ஆறுமுகம் சிவசம்பு நடேசன்,
3. இருவரும், தொண்டமனாறு.
4. ஆறுமுகம் சிவசம்பு ஜெயநாதன், தொண்டமனாறு. தனது அற்றோனித் தத்துவகாரன் மனுதார் மூலம்

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக கேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981ம் ஆண்டு ஆவணி மாதம் 25ந் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி

சு. வ. கணேசன்
பதிவாளர்

(0740)

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
1981ம் வருடத்திற்கான
சுத்தமான 2" உடைசல்லி

## கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்கு 1981ம் வருடத்திற்கு சுத்தமான 2" உடைசல்லி விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் சமர்ப்பிப்போர் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 02-09-81-ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் தங்கள் கூறுவிலை விபரங்களை 03-09-81ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு, "மராமத்துப் பகுதி 1981 ஆம் ஆண்டிற்கான சுத்தமான 2" உடைசல்லி" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாண மாநகர மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்புகொள்ளவும்.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்
வேலைப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
24-08-81 (0746)

Wanted a Clerk of Works to supervise 1½ million rupees worth of building work. Applications Close on 10-9-81.

DIRECTOR
JAFFNA COLLEGE
TECHNICAL INSTITUTE,
Vaddukoddai. (0736)

## முதலாண்டு நினைவஞ்சலி

27-8-81 (ஆண்டுத்திதி)

தோற்றம்: 17-1-33



மறைவு: 7-9-80

### தம்பிப்பிள்ளை சதாசிவம்

(கிராமசேவையாளர்)

எங்களையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டாலும்,

நெஞ்சம் மறப்பதில்லை; நினைவலைகள் ஓய்வதில்லை, உலகில் உள்ளவரை பிரிவுத்துயர் ஒழிவதில்லை.

உங்கள் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பெருமகன், மாமி

மனைவி: திருமதி சரஸ்வதி சதாசிவம் (ஆசிரியை).
பெருமகன்: செல்லத்துரை சற்குணனந்தன்.
மாமி: திருமதி வ. செல்லத்துரை.

பூநகரி-நல்லூர். பூநகரி. (0748)

**மணிவாக்கு**

அகங்காரத்தை அகற்றியவர்கள் வாயிலாகவே அரும்பெரும் காரியங்கள் நிகழ்கின்றன.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## கல்வி வெள்ளை அறிக்கை

படித்த அனைத்தையும் மறந்தபின் எஞ்சிநிற்பது எதுவோ அதுவே உண்மையான கல்வி என்று ஒரு பழமை வாய்ந்த வாசகம் உண்டு.

அங்ஙனம் எஞ்சி நிற்பது எது? எப்பொருளைக் கேட்டாலும் அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண்பதே அது. இவ்வித சிந்தனை சக்தியை விருத்திசெய்வதே ஒரு சிறந்த கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா கல்வியில் தாம் கொண்டுவர இருக்கும் சீர்திருத்தங்களை ஒரு வெள்ளை அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார்.

கல்வியின் முக்கியநோக்கம் காலத்துக்குக் காலம் வேறுபட்டிருக்கும் போதும்; என்றும் மாறுபடாத அடிப்படை நோக்கத்தை இவ்வறிக்கை வற்புறுத்தத் தவறிவிட்டதெனலாம்.

மாணவர்களே நாட்டின் பெருஞ்செல்வம்; கல்வியின் மூலம் மாணவமணிகளை நன்னெறிப்படுத்தி நாட்டின் நலனை விருத்தி செய்வதே கல்வியின் அடிப்படை நோக்கம்.

இன்று தொழிற்படும் கல்வித் திட்டத்தை நாம் ஒரு ஆகாய விமானப் பார்வையில் நோக்குங்கால் என்ன முடிவுக்கு வரமுடியும்?

நாட்டின்எப்பாகத்திலும் முளைத்திருக்கும் அடுப்படி டியூற்றரிகளையும், தகுந்த ஆசிரியர்கள், அதிபர்கள் இல்லாத கல்லூரிகளையும், நடிகர்களின் சினிமா விளம்பரம்போன்ற டியூற்றறி ஆசிரியர்களின் பட்டங்களும் பாடங்களும் யாவும் விளம்பர ரூபமாகவே காண்கின்றோம்.

தேசிய பாடசாலைகள் உறக்கத்தில்போய்விட்டன, பிரபல பாடசாலைகள் மேனாட்டு விளையாட்டுகளில் கவனம் செலுத்துகின்றன. திறமைசாலி ஆசிரியர்கள் ஆபிரக்கணக்கில் வெளிநாடு செல்கின்றனர்.

அங்கு கிடைக்கும் பெருஞ்சம்பளம்பெற முடியாதவர்களே இங்கே கூதற்காய்கிறார்கள் என்ற அவதம்பிக்கை பெற்றோரைப் பிடித்திருக்கின்றது.

மருத்துவதுறையில் தனியார் பிரிவு செழிப்பதுபோல், போக்குவரத்தில் தனியார் சேவை, வர்த்தகத்தில் தனியார் சேவை— இவை இன்று சிறந்திருக்குமாப்போல், கல்வியிலும் தனியார் சேவை மாணவர்களைப் பரீட்சைக்கும் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கும் தயாராக்குகின்றது.

உண்மையான கல்வி— மாணவன் அறிவைத்தேடும் ஆற்றலை அபிவிருத்தி செய்யவல்லது; அத்துடன் சாதி, சமய, மொழி, இன பேதமற்ற மனிதாபிமானத்தை வளர்க்கும் பெரும் கருவியாகத் திகழவேண்டும்.

இன்றைய கல்வி நிலை இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்றுவதாகவில்லை.

இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, கிராமப்புற மத்திய மகாவித்தியாலயங்கள், இவைக்கு மேலாக அரசாங்க பாடசாலைகள் இவையெல்லாம் நாட்டின் கல்விச் சேவையை பன்மடங்கு அதிகரித்துவிட்டன.

நாட்டின் ஜனத்தொகையில் காற்பங்கு பாடசாலை மாணவர்கள்; 10,000 கல்வி ஸ்தாபனங்கள்; பல பல்கலைக்கழகங்கள்; தொழிற்கல்வி, விவசாயக் கல்வி நிலையங்கள்; நாட்டின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதி கல்விக்குச் செலவிடப்படுகின்றது.

விளைவு என்ன? உலகிலேயே பெருமை வாய்ந்த விஞ்ஞானிகள், சட்டக்கலைஞர்கள், மருத்துவர்கள், கணித மேதைகள், பொறியியல் நிபுணர்கள், பேராசிரியர்கள் — இவர்களெல்லாம் எமது நாட்டின் படைப்புகளே?

ஆனால் இவர்களிற் பலர் வெளிநாடுகளில் பிரகாசிக்கின்றனர். நைஜீரியாவில் சுமார் 1000 உத்தியோகத்தர்களில் பெரும்பாலோர் இலங்கைபட்டதாரி ஆசிரியர்கள்.

உருவாக்கி விட்டதாய் பிச்சை எடுக்க தம்பி குப்பகோணத்தில். கோதானம் பண்ணுகின்றான் என்பதற்கமைய திறமைசாலிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

நாடு வெளிச்சேறிக்கிடக்கிறது. எங்கள் பாடசாலைகளில் மாணவர்கள் ஒழுக்கமுடையவராக, திறமைசாலிகளாக தங்கள் ஆற்றல், ஆர்வத்துக்கேற்ற தொழிற்திறமையை விருத்தி செய்பவர்களாக வேண்டுமானால் ஒருசிறந்த ஆசிரிய குலத்தை புனரமைப்பது முதன்மையானது.

கடந்த ஆட்சிகளில் ஒவ்வொன்றும் இதனைக் கவனிக்காமல் விட்டதனால் நாடு பல வகையிலும் அல்லற்பட்டு தேசியப் பண்பு குன்றி முன்னேற்றம் காணமற் திணறுகின்றது.

# நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

[நேற்றைய தொடர்ச்சி]

1. பெண்களைப் பருவமடைவதற்கு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

2. அவர்களுக்கு விருப்பமில்லா புருஷனை விவாகம் செய்யும்படி வற்புறுத்தக் கூடாது.

3. விவாகம் செய்து கொண்டபிறகு அவர்கள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்கவேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப் படுத்தக்கூடாது.

4. பிதுராஜிதத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்கவேண்டும்.

5. புருஷன் இறந்த பிறகு பெண் மறுபடியும் விவாகம் செய்து கொள்வதற்குத் தடுக்கக்கூடாது.

6. விவாகமே இல்லாது தனியாக இருந்து வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாகச் சீவிக்க விரும்பும் பெண்களை யதேச்சையான தொழில் செய்து சீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.

7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருடனுடன் பேசக்கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும் பொறுமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விடவேண்டும்.

8. பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக்கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்தவேண்டும்.

9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெறவிரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

10. பெண்களுக்கும் அரசாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்கவேண்டும்.

சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் இருப்பதைத் தான் பாடிய முப்பெரும் பாடல்களுள் ஒன்றான பாஞ்சாலி சபதத்தில் பாரதி கடிந்து கூறுகின்றார். பெண்ணுக்கு நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்ற நான்கு இயல்புகளையும் பேணிப் பெண்ணடிமையை வலுப்படுத்துவதை சுட்டிக் காட்டுகின்றார். ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் என்ற நான்கு குணங்களுமே நற்குடிப் பெண்ணுக்குத் தேவையான இயல்புகளென அவர் வகுத்துக் கொடுக்கின்றார்.

மனைவியையே சக்தி வடிவாகக் காண எண்ணுகின்றார் பாரதி. அந்த சக்தியே உலக மகாசக்தி என்று நம்புகின்றார். பெண்ணின் பெருமையைப் பாரதி சிந்தித்துக் கூறியவை இன்றைய நடைமுறைவாழ்வில் நாம் சிந்திக்கவேண்டியவை.

குடும்பத்தின் அறிவு பெண்ணின் மேற்பார்வையில் தங்கி இருக்கின்றது. ''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே'' என்ற காலம் போய் சான்றோர் ஆக்கும் கடமையும் பெற்றுப் பெண்கள் இன்று வாழ்கின்றனர். உலையூதி உலகக்கனல் வளர்க்கும் அன்னையரது பணி இன்று அளவிடற்கரியது. உலகத்தையே இயக்கும் அரும் பெரும் சக்திகளான பெண்கள் தங்கள் நிலை மறந்து வாழக் கூடாது.

பல்கலைக்கழகம் செய்யத்தவறிய பணிகளைப் பாமரப் பெண்களும்செய்வதற்கு இன்று கூட்டுறவு நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. கூட்டுறவு மகளிர் குழுக்கள் சேர்ந்து மனுக்குலத்தின் சிறப்புக்காகப் பெரிதும் பாடுபடவேண்டும். பயனில்லாது உழைக்க வேண்டும், நமது குடும்பங்களையே பல்கலைக்கழகங்களாக மாற்ற வேண்டும். பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் சிந்தனைகளை மனத்திருத்தி நாட்டு முன்னேற்றத்திற்காகச் செயற்படவேண்டும். போதனையால் மட்டுமன்றிச் சாதனையாலும் இதனைச் செய்வதற்கு தகுதி படைத்தவர்கள் பெண்களே என்பதை நிலைநாட்டவேண்டும்,

''காதல் செய்யும் மனைவியே
சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே
எய்த வேண்டும்''.

என்ற பாரதியின் வாக்கு பொருள் நிறைந்ததாக மாறப் பெண்களின் நடைமுறை வாழ்வே காரணமாக வேண்டும். அதுவே அந்த மகாகவிக்குப் பெண்களாகிய நாங்கள் செய்யும் நன்றிக் கடனாகும்.

—மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ.—
தலைவி - மகளிர் குழு, ந. ப. கூ. சங்கம்



## இன்று நல்லூர்க் கந்தன் சப்பரத்திருவிழா

சதிதனை ஒன்றையுங்காண
கின்றிலேன் கந்தவேள்
முருகா
நதிதனையன்ன பொய்வாழ்வி
லன்பாய் நரம்பாற்
பொதிந்த
பொதிதனையுங்கொண்டு
திண்டாடுமாறெனைப்
போதவிட்ட
விதிதனை நொந்து நொந்திங்கே
யென்றன் மனம்வே
கின்றதே!

—கந்தர் அலங்காரம்

## தந்தைக்கு உபதேசம் செய்தவனே! குமரா!!

ராகம் - மோகனம் — தாளம் - ஆதி

பல்லவி

நல்லைநகர் வளரும் நாயகனே! முருகா!!
தொல்லை கரும்வினைகள் தொலைய அருளுமையா!!
[நல்லை...]

அனுபல்லவி

வேடர்குல மகளும் தேவர்குல மகளும்
ஆடும் மயிலில் உன்தன் அருகில் அமர்ந்திருக்க...
[நல்லை...]

சரணம்

சிந்தனை செயல்யாவும் உன்தனுக்கே தந்து
சந்ததம் பணிபவரின் சிந்தையில் நிறைந்திருப்பாய்!
கந்த மலர்ப்பாதம் தந்தென்றும் ஆண்டிருப்பாய்!
தந்தைக்கு உபதேசம் செய்தவனே! குமரா!
[நல்லை...]

எஸ்.முருகையா

## நாடும் நடப்பும்

''சங்கராபரணம்'' பார்த்தீரா என்று நண்பர் பரம் தில்லைராஜா கேட்டார். இப்போது நான் சினிமாப் பார்ப்பது வெகு குறைவு; ஆனாலும் 'சங்கராபரணம்' பார்ப்பதற்கு விருப்பம் என்றேன்.

'சங்கராபரணம்' ஒரு பெரிய திருப்பத்தை நமது இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது தெரியுமா என்றார் பிரபல கர்நாடக சங்கீதவித்துவானான நண்பர் பரம்!

என்ன திருப்பம்?

பொப் இசை, றொக் அன் றோல் என்று துள்ளிக்கொண்டு திரிந்த நமது இளைஞர்கள் பலரும் இன்று வாழைக்குலையைச் 'சங்கராபரணம்' என்று 'கர்நாடக சங்கீதத்தை தயிரை அமைதியாக அமர்ந்து கேட்டு ரசித்து உருகுகிறார்கள.

என்னதான் துள்ளல் இசைகள் வந்து ஒரு மயக்கத்தை ஏற்படுத்தினாலும் உண்மையான கர்நாடக இசைக்கு என்றும் பாதிப்பு ஏற்படாது.

பொப் இசை இங்கு கொடிகட்டிப் பறந்த சமயத்தில் கர்நாடக இசைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சியவர்களும் உண்டு.

'சங்கராபரணம்' படம் கர்நாடகசங்கீதத்தின் மகிமையை இளைஞர்களும் உணர்ந்துகொள்வதற்கு வழி செய்திருக்கிறது. தமிழ்த்திரையுலகம் மீண்டும் பாடல்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் நிலைக்கு வரக்கூடும்.

நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்குமுன் பாகவதரின் படங்கள் வருடக்கணக்கில் ஓடின. அவரின் வெண்கலக்குரலுக்கும் பாபநாசம்சிவனின் பாடல்களுக்கும் சுத்தமான கர்நாடக இசைக்குமாகவே அந்தப் படங்கள் வருடக்கணக்கில் ஓடின.

'சங்கராபரணத்துடன் மீண்டும் தமிழ்த்திரையுலகில் மாற்றம் ஏற்படலாம்.

ஃ ஃ ஃ

ஒரு படித்த பட்டதாரிப் பெண்ணுக்கு மாப்பிளை பார்ப்பதற்கு அவரது பெற்றோர் முயற்சி மேற்கொண்டனர். பெண்ணின் படிப்புக்கேற்ற மாப்பிள்ளை பார்க்கவேண்டும்.

எஞ்ஜினியர் மாப்பிள்ளை என்றாலும் டாக்டர் மாப்பிள்ளை என்றாலும் சீதனம் என்ன தெரியுமா?

வீடுவளவு, வயல்காணி, நகை யாவும்போக ஒரு லட்சம் டொனேஷன், ஒரு லட்சம் சீதனம்!

ஐயோ தமிழ்ச் சமுதாயமே!

— ஊர்சுற்றி

## பஸ் விபத்து: 33 பேர் பலி!

ஜாவா, ஆக. 25

ஜாவாவில் பாலமொன்றின் நடுவே இரு பஸ்கள் மோதிக்கொண்டதால் 32 பேர் பலியானார்கள். காயமடைந்த 46 பிரயாணிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

# இன்று கொழும்புவரும் 'பிரிட்டானியர்' படகு

[கொழும்பு]

அரச உலாப்படகான ''பிரிட்டானியா'' ஆஸ்திரேலியா செல்லும் வழியில், இன்று கொழும்பு வருகிறது. எரிபொருள் பெறும்பொருட்டு அது இங்கு ஒறுகியகாலம் தரித்து நிற்கும்.

கொழும்புப் பயணத்துக்கு முன் இப்படகை வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் மத்தியதரைக் கடலில் தமது தேன் நிலவுச் சுற்றுலாவுக்குப் பயனபடுத்தியது குறிப்பிடத்தக்கது.

மகாராணியால் 1953ல் வெள்ளோட்டம் விடப்பட்ட 5,862 தொன் நிறையுள்ள இப்படகு மகாராணிக்கும் ஏனைய அரச குடும்பத்து உறுப்பினர்க்கும் அவர்களது வெளிநாட்டு விஜயங்களின்போதும், அந்தநாட்டு கடல் பயணங்களின்போதும், உத்தியோகபூர்வ வாசஸ்தலமாகவும் பிரத்தியேக வாசஸ்தலமாகவும் பயன்படுகிறது. இதன்காரணமாக படகு இங்கு தரித்திருக்கும்போது பத்திரிகையாளர் பொதுமக்களில் எவரும் அதில் ஏறிப்பார்க்க இயலாதிருக்கும்.

நாலூற்றிப் பன்னிரண்டடி நீளமான இப்படகு அரச உலாப் படகுகளின் கப்பலதிகாரியினால் நேரடியாக நிருவகிக்கப்பட்டுவருகிறது. படகில் 256 மாலுமிகளும் 21 அதிகாரிகளும் உள்ளனர். அனைவரும் அரசகடற்படைத்தொண்டராவர்.

காலத்துக்குக்காலம் 'பிரிட்டானியா' கடற்பயிற்சிகளிலும், நிலவுலக நீர்நிலைப் பரப்பாராய்ச்சிகளிலும் ஈடுபடுகிறது. போர்க்காலத்தில் 200 நோயாளிகளைப் பராமரிக்கும் மருத்துவக் கப்பலாக மாறக்கூடிய வேகமும் விசேட வசதிகளும் படகில் உள்ளன. முன்னர் அரச உலாப்படகாக இருந்த விக்டோரியா அன் அல்பேர்ட் என்ற படகிலிருந்த தளபாடங்கள் பல இதில் பொருத்தப்பட்டுள்ளன. படகின் உள் அலங்காரத்தில் மகாராணியும் கோமகனும் தனிப்பட்ட அக்கறை காட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 28ல் புறப்படும்படகு ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்புகையில் மீண்டும் கொழும்பு வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## மிகுதிப் பணத்தை அனுப்புமாறு எம்.பிக்கள் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே 84 லட்சம் ரூபாவில் திறைசேரி ஒருகோடி 15 லட்சம் ரூபா தான் அனுப்பியது. மீதி 69 லட்சம் ரூபாவையும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ் மாவட்ட எம்பிக்களான திரு வெ. யோகேஸ்வரன், திரு. கே. துரைரத்தினம், திரு. ராஜலிங்கம், திரு. பொ. இரத்தினம் ஆகியோர் நிதி அமைச்சருக்கும், திறைசேரிச் செயலாளருக்கும் தந்தி அனுப்பி வைத்துள்ளனர். [மா]

## வண்டிச் சில்லுக்குள் விழுந்து சிறுவன் பலி!

[பண்டத்தரிப்பு]

சில்லாலையைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவன் ஒருவர் வண்டில் சில்லுக்கு பலியானார்.

கல் ஏற்றிக் கொண்டுவந்த வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்த சில்லாலையைச் சேர்ந்த இராசநாயகம் மனோகரன் என்னும் 12 வயதுச் சிறுவனே இவ்வாறு பரிதாபமாக பலியானவராவர்.

இவரது மரண விசாரணை யாழ் அரசினர் வைத்திய சாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

பிரஸ்தாப சிறுவன் கல் ஏற்றிக்கொண்டு வந்த வண்டிலில் ஏறி நின்றதாகவும், அப்போது கால்தவறி வண்டிச்சில்லுக்குள் விழுந்துவிட்டதாகவும், அவரின் மீது சில்லு ஏறியதாகவும், துடிதுடித்துக்கொண்டிருந்த அவரை உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்தபோது அங்கு அவர் உயிர் பிரிந்துவிட்டதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

## திருமலை பலாத்கார வழக்கில் எதிரிகள் விடுதலை

[திருமலை]

திருகோணமலை பெண்கள் கடத்தல், பலாத்காரவழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு திருமலை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. சுந்தரலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் திருகோணமலை உவர்மலையில் கடந்த ஆண்டு நவம்பர் 27-ம் தேதி இருவாலிபர்கள் இருபெண்களைக் கடத்திச் சென்று பலாத்காரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் வி. ஆர். சச்சிதானந்த, பி. ரங்கநாதன், எஸ். சச்சிதானந்தன், ஏ. தெய்வேந்திரன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி பி. ரங்கநாதன், சட்டத்தரணி எஸ். சச்சிதானந்தனின் உதவியுடன் ஆஜரானார். (க-அ)

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் வாழும் விதவை ஒருவருக்கு கொழும்பிலுள்ள ஓய்வூதிய திணைக்களம் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது.

எத்தனையோ அலைச்சல்கள் தொல்லைகளுக்குப் பின்னர் அவர், கனிப்பட்ட ஒருவரின் உதவியால் அந்த உத்தியோக மொழிக்கடிதத்தின் மொழிபெயர்ப்பைப் பெற்றுக்கொண்டார்!

ஒரு செய்தி; தமிழ், தேசியமொழியாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்!

ஃ ஃ ஃ

இருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

ஒருவர்: ஒலியைவிட வேகமானது எது?

மற்றவர்: இப்பொழுது ...வாறு தாறு நதன்று தீறு. புரிகிறதா?

— ஊடுருவி

## செப்டம்பர் 8-ல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவியான திருமதி சிறிமாபண்டாரநாயக்காவுக்கு எதிராக சுதந்திரக்கட்சி எம். பி.க்களான திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா, அநுரா பண்டாரநாயக்கா, ஜனாப் ஹலீம் இஷாக், முன்னாள் சபாநாயகர் திரு: ஸ்டான்லி திலகரத்தின ஆகியோர் கொழும்புமாவட்ட நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்தது தெரிந்ததே. [வெ-அ]

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சைவநிறுவனங்கள் யாவற்றையும் ஒருங்கிணைத்து செயற்படத்தக்க 'சைவ நெறித் தொண்டர் கழகம்' ஒன்றை அமைப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் ஒன்று யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 30ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. [மா]

## குருவாக திருநிலை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலய பங்கைச் சேர்ந்த அருட்திரு வின்சன் பற்றிக் அடுத்தமாதம் 4ம் திகதி காலை யாழ் ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இவர் புங்குடுதீவு மரியான் தாவீது ஆஞசி தம்பதிகளின் புதல்வரும், புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைப் பழைய மாணவனும், பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு கலைப்பட்டதாரி மாணவனுமாவார். [அ]

## அபிவிருத்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் வர இருக்கிறது.

செப்டம்பர் 22ம் திகதி வரை இருக்கும் இந்த நிபுணர் குழு, யாழ் மாவட்ட செயலகத்தில் தங்கியிருந்து சம்பந்தப்பட்ட திட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி திட்டங்கள் செயல்படுத்துவதுபற்றி ஆராயும் எனத் தெரிகிறது. [மா]


# இன்று ஆரம்பம்

27-8-1981

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

ஆரம்பிக்கும்

## லக்சரி பஸ் சேவை

யாழ்ப்பாணம் — கொழும்பு

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

பதிவு செய்வதற்கும் டிக்கட்டுகளுக்கும்:

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 83 0

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

இல: 82, கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்

இல: 6, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல: 7596.

புறப்படும் இடம்:

கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்

முதற்பயணம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்

27-8-81 மாலை 7-45 மணி

இரண்டாவது பயணம் — 30-8-81

ஞாயிறு மாலை 7-45 மணிக்கு


## ஜனாதிபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

ஆனால் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பாராளுமன்றப் பகிஷ்கரிப்புக்கு முன்வைத்த 5 கோரிக்கைகள் தொடர்பானதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அபிவிருத்தி சபைகளின் நிருவாக கமிட்டி சம்பந்தப்பட்டதுமே என்று திரு. அமிர்தலிங்கம் கூறினார். இவை தவிர வேறு எந்த சமரசப் பேச்சுவார்த்தையிலும் தாம் ஈடுபடவில்லை என்றும் திரு. அமிர்தலிங்கம் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி அதன் பாராளுமன்றப் பகிஷ்கரிப்புக்கு முன்வைத்த கோரிக்கைகளில் சர்வதேச மன்னிப்புச்சபை அல்லது சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுபோன்ற ஒரு சர்வதேச அமைப்புமே-- ஜூன் யாழ். சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்பது சர்ச்சைக்குரியதாகும் இக்கோரிக்கைகள் மீதான பேச்சுவார்த்தையும் முக்கியமானவையாகவே அமையும்.

இன்றைய சந்திப்பில் திரு அமிர்தலிங்கத்துடன் கூட்டணித் தலைவர் திரு. மு சிவசிதம்பரமும் கலந்துகொள்வார். [ம]

## அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: தேடப்பட்ட நபர் நீதிமன்றத்தில் சரண்

[ஊர்காவற்றுறை]

ஒருவாரத்திற்கு முன்னர் அல்லைப்பிட்டியில்இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபரான மண்கும்பானைச்சேர்ந்த சந்திரன்என்று அழைக்கப்படும் தியாகராசா சந்திரசேகரம் என்பவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்தார்.

சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மூலம் சரணடைந்த இச்சந்தேகநபரை எதிர்வரும் 2ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதிபதி திரு ரி. கே. என். திலகன் உத்தரவிட்டார். இச் சந்தேகநபருக்கு எதிராக நீதிபதி ஏற்கனவே பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் அம்மன் றோட்டைச் சேர்ந்த 24 வயது நிரம்பிய கந்தசாமி ஸ்ரீஸ்கந்தராசா என்ற வாலிபர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதை அடுத்து நடத்தப்பெற்ற மரண விசாரணையில் இம்மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது நீதிபதி சந்தேகநபர்களான கந்தையா தனபாலசிங்கம் தியாகராசா சந்திரசேகரம் ஆகிய இருவருக்கும் எதிராகப் பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார்.

இவர்களில் கத்திக்குத்துக் காயத்துடன் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கந்தையா தனபாலசிங்கம் பொலிசாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொலைக்கு பாவிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர்கள் பிரயாணம் செய்ததாக கருதப்படும் சி. என். 9525 இலக்கம் கொண்ட ஏ-40 கார் வேலணை நெடுஞ்சாலைகள் அமைச்சு அலுவலகத்திற்கு அருகில் நிராதரவான நிலையில் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரான கந்தையா தனபாலசிங்கம் ஏற்கனவே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## அமிர் அனுதாபம்

[கொழும்பு]

திஸம்பாரமையில் மரணமான தமிழ்நாடு திருவொற்றியூரைச் சேர்ந்த திரு என். தனபதிக்கு அனுதாபம் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திரு. தனபதியின் குடும்பத்தினருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோருக்கும் தந்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

தமிழ்மக்கள் சார்பிலும் தனது சார்பிலும் இந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாக திரு. அமிர்தலிங்கம் இத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார். [ம]

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஹூ ஸ்ரீ ஆகஸ்ட் 27-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81 P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.